SENGUNTHAR

# Daily News

SaHaa'26
Designing Intelligence

18-03-2026/SEC/DN/381







WELCOME
EMPIRE
Sahaa'26


DEPARTMENT OF SCIENCE AND HUMANITIES
SaHaa' 26
Ethnic Performance
(CULTURALS)


PHOENIX
PARADOX IT
CSE FREESTYLE
CSE
SAHAA 2K26
CSE



SENGUNTHAR
Daily News
SaHaa'26 Designing Intelligence
18-03-2026/SEC/DN/381

## திருச்செங்கோடு, செங்குந்தர் பொறியியல் கல்லூரி (தன்னாட்சி)யில் தேசிய அளவிலான தொழில்நுட்ப கருத்தரங்கம் SaHaa'2026

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு செங்குந்தர் பொறியியல் கல்லூரி (தன்னாட்சி)யில் அறிவியல் துறையின் சார்பாக SaHaa'2026 என்ற தலைப்பில் 19-வது தேசிய அளவிலான தொழில்நுட்பக் கருத்தரங்கம் 18.03.2026 அன்று காலை 10.00 மணி அளவில் நடைபெற்றது. செங்குந்தர் கல்வி நிறுவனங்களின் தலைவர் ஜான்சன்ஸ் திரு.T.S.நடராஜன் அவர்கள் தலைமை வகித்தார். செங்குந்தர் நிறுவனங்களின் தாளாளர் மற்றும் செயலாளர் பேராசிரியர் திரு.A.பாலதண்டபாணி அவர்கள் சிறப்புரையாற்றினர். பொருளாளர் திரு.M.K.தனசேகரன் அவர்கள் மற்றும் செயல் இயக்குனர் திரு.அரவிந்த் திருநாவுக்கரசு ஆகியோர் முன்னிலை வகித்தனர். செங்குந்தர் பொறியியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் R.சதீஷ்குமார் அவர்கள் வரவேற்புரை வழங்கினார். இளங்கலை முதலாம் ஆண்டு கணினி அறிவியல் துறை மாணவிகள் S.S . மிதுனா ,U .ஐஸ்வர்யா ஆகியோர் சிறப்பு விருந்தினரை அறிமுகம் செய்தனர். இதில் சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் மாணவர்கள் P.சுப்ரமணியம் ஆக்சென்சர் சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடேட் துணை மேலாளர் கோயம்புத்தூர், மற்றும் S.வசந்த் விக்டர் சேலம் ஆங்கர் மருத்துவ சாதனங்கள் மேலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். அவர்கள் தங்களது உரையில் கல்லூரி அனுபவங்களை பகிர்ந்து கொண்டு, மாணவர்களிடையே ஒழுக்கமும் படிப்பில் அர்ப்பணிப்பும் முக்கியம் என்பதை வலியுறுத்தினார்கள், மற்றும் வெற்றிக்கான மூன்று முக்கியக் கொள்கைகளை விளக்கினார்கள். அர்ப்பணிப்பு (commitment), மனப்பாங்கு (attitude), மற்றும் வாய்ப்புகளை அடையாளம் காணும் திறன்களை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று கூறினார்கள்.. மற்ற கல்லூரிகளிலிருந்து 250 ஆராய்ச்சி படைப்புகள் பெறப்பட்டன. மாணவர்களால் எதிர்கால பொறியியல் குறித்த விளக்கப்படங்கள், சமூக நெறிமுறைகள் குறித்த குறும்படம் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. சிறந்த முன்னாள் மாணவர் விருது 2008–2012ம் ஆண்டு இயந்திர பொறியியல் துறையில் பயின்ற (Mechanical Engineering) மாணவர் திரு. என். சக்தி விஷ்வேஷ்வர் அவர்களுக்கு வழங்கப்பட்டது. தொழில் முனைவோர் சிறப்பு விருது 2005–2009ம் ஆண்டு கட்டவியல் துறையில் (Civil Engineering) பயின்ற முன்னாள் மாணவர் கே.ஆர். கேசவன் அவர்களுக்கு வழங்கப்பட்டது. சமூக சேவை சிறப்பு விருது 2008–2012ம் ஆண்டு மின்னணு மற்றும் தொடர்பு பொறியியல் துறையில் (ECE) பயின்ற முன்னாள் மாணவர் டாக்டர் எல். துரை முருகன் அவர்களுக்கு வழங்கப்பட்டது. கல்வி மற்றும் ஆராய்ச்சி சிறப்பு விருது 2004–2008ம் ஆண்டு மின் மற்றும் மின்னணுவியல் துறையில் பயின்ற முன்னாள் மாணவர் (EEE), டாக்டர் எம். சத்தியநாதன் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியை அறிவியல் துறை தலைவர் முனைவர் K.L.பழனிசாமி அவர்கள் ஒருங்கிணைத்து நடத்தினார். வெற்றி பெற்ற மாணவ - மாணவிகளுக்கு சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் வழங்கப்பட்டது. இறுதியில் முதலாமாண்டு கணினி அறிவியல் துறை மாணவி K .தீபிகா நன்றியுரை கூறினார்.

## Motivational Expert Session Held at Sengunthar Engineering College




**The Entrepreneurship Development Cell of Sengunthar Engineering College, in association with the Institution's Innovation Council (Ministry of Education initiative) and the Department of Medical Electronics, organized a session titled "My Story/ Motivational Expert Sessions by Successful Innovators & Entrepreneurs." Mr. Vasanth Victor, Founder and Managing Director of Anchor Medical System, Salem, shared his entrepreneurial journey and insights. The session motivated students to develop innovative ideas and pursue entrepreneurship.**




**Mr.P.subramaniyam, Associate Manager,Full stack LLM Development, Accenture solutions Pvt.Limited , Coimbatore gave the alumni talk about current trends of AI, Usage of UI & UX tools, Requirements in current scenario.**



The Department of Civil Engineering in association with the IQ Club and IE(I)-Salem, successfully hosted the seminar, "The Intelligent Flow: Predicting Demand & Preventing Loss," on celebration of world water day. In alignment with the 2026 World Water Day global theme, "Water and Gender," our discussions focused on how intelligent infrastructure and predictive technology can lead to a more equitable and sustainable future for all.

A special thank you to the esteemed Resource Person, R. Sinduja, M.Sc., M.Phil., Proprietor, Swan Enviro Solutions - Erode.

SENGUNTHAR

Daily News

SaHaa'26 Designing Intelligence

18-03-2026/SEC/DN/381

## நுவலிதமிழ் மன்றம் - தினம் ஒரு திருக்குறள்



குறள்:742

மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடும் உடைய தரண்.

விளக்கம்:

ஆழமும் அகலமும் கொண்ட அகழ், பரந்த நிலம், உயர்ந்து நிற்கும் மலைத்தொடர், அடர்ந்திருக்கும் காடு ஆகியவற்றை உடையதே அரணாகும்.

## இலக்கணக் குறிப்பறிதல்

### செயப்பாட்டுவினைத் தொடர்

செயப்படுபொருளை எழுவாயாகப் பெற்றும், எழுவாயோடு மூன்றாம் வேற்றுமை உருபைப் பெற்றும், பயனிலையோடு 'படு' என்பதைப் பெற்றும் வருகின்ற தொடர் செயப்பாட்டுவினைத் தொடர் எனப்படும்.

**எடுத்துக்காட்டு**

- திருக்குறள் திருவள்ளுவரால் இயற்றப்பட்டது.
- கம்பராமாயணம் கம்பரால் இயற்றப்பட்டது.
- வெற்றி பெற்றோர்க்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.
- கல்லணை கரிகாலனால் கட்டப்பட்டது.
- தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டன.

## பிறமொழிக்கு இணையான தமிழ்ச் சொற்கள்

பிறமொழி: உபகாரம் தமிழ்மொழி : நன்றி



SENGUNTHAR ENGINEERING COLLEGE (AUTONOMOUS) TIRUCHENGODE-637205,NAMAKKAL (Dt),TAMILNADU